மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள்.

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துறையூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அவரது தொகுதியைச் சார்ந்த மணிகண்டன் என்னும் மாணவர் சர்வதேச காது கேளாதோர் தடகள விளையாட்டுப் போட்டியில் பங்குபெற நிதி உதவியும், உபகரணங்களும் வழங்கக் கோரியுள்ளார்.

அரசு விதிமுறைகளின்படி, சர்வதேச அளவிலான அங்கீகாரம் பெற்ற போட்டிகளில் கலந்துகொள்ள வெளிநாடுகளுக்குச் சென்று வர விமான கட்டணமாக ரூ.30,000 வழங்கப்படும். அவர் போட்டியில் கலந்து கொண்டு, உரிய ஆவணங்களை அரசுக்கு வழங்கிய பிறகு நிதியுதவி வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அவர் பயிற்சி பெற திருச்சியில் உள்ள அண்ணா மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்குச் சென்றால் உரிய பயிற்சியும், தேவையான உபகரணங்களும் இலவசமாக வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

‘தமிழ்நாடு’ பொன்விழா ஆண்டு கொண்டாடுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள், அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை படிக்கின்றார், அதனைக் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை படிக்கின்றார்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் வரலாறும், தமிழ் மக்களின்

பண்பாடும் மிகவும் தொன்மை வாய்ந்தவை ஆகும். “பூமியில் முதல் மனிதன் தோன்றியது தமிழ் பேசும் நிலத்தில்தான்” என்று மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் சொல் ஆராய்ச்சிகளால் விளக்கியுள்ளார்.

“வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்”

என்று வடக்கே வேங்கட மலை முதல் தெற்கே குமரி வரை தமிழ்நாடு, சீரோடும் சிறப்போடும் விளங்கியதை வரையறுத்துச் சொல்கிறார்.

தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டில் இணையில்லா தமிழ்ப்பெருங்கவியாய் விளங்கிய மகாகவி பாரதியார்,

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”

என்றும்,

“கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்
கம்பன் பிறந்த தமிழ்நாடு”

என்றும், தமிழ்நாடு என்ற உணர்வோடு பாடி அன்றைக்கே பரவசப்படுத்தினார்.

“நம் நாடு தமிழ்நாடு,
நாமெல்லாம் தமிழ் மக்கள்”

என்று புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனார் ஆணித்தரமாக உரைத்தார். இவ்விதமாக ஆளுமைத் திறன்கொண்ட தமிழ்ப் புலவர்கள் ‘தமிழ்நாடு’ என்று வாயாரப் பாடி மனதார அழைத்த நாடு நம் தமிழ்நாடு!

நம்மோடு, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் இணைந்து ‘பிரசிடன்சி ஆப் மெட்ராஸ்’ என்று ஆங்கிலத்திலும், ‘சென்னை மாகாணம்’ என்று தமிழிலும் அழைக்கப்பட்டு வந்த நிலையில், இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி மாநிலப் பிரிவினை ஏற்படுத்தப்பட்ட பிறகு, ‘சென்னை மாகாணம்’ என்னும் பெயரை மாற்றி ‘தமிழ்நாடு’ எனப் பெயர் மாற்றப்பட வேண்டும் என்று அன்றைக்கு ஆளுங்கட்சியாக இருந்த காங்கிரஸ் அரசின்முன் 1956, ஜூலையில் கோரிக்கையினை தியாகி சங்கரலிங்கனார் அவர்கள் முன்வைத்தார்கள்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜனவரி 11

பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலான அரசு அமைந்தவுடன், 1967 ஆம் ஆண்டு அப்போதைய சென்னை மாகாணத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்ட, சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, 1969 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் நாள் 'தமிழ்நாடு' என்று நமது மாநிலத்திற்கு பெயர் சூட்டப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 2–வது உலகத் தமிழ் மாநாட்டினையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 5–வது உலகத் தமிழ் மாநாட்டினையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 8–வது உலகத் தமிழ் மாநாட்டினையும் சிறப்பாக நடத்தி, தமிழின் பெருமையையும், தொன்மையையும் உலகறியச் செய்தார்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழுக்கென்று தனி பல்கலைக்கழகத்தை தஞ்சாவூரில் நிறுவினார்கள். மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தை தோற்றுவித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையிலும், தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் சித்திரை முதல் நாளை மீண்டும் தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்தார்கள். உலக நீதி நூலான திருக்குறளை அதிக மக்கள் பேசும் சீன, அரபு மற்றும் கொரிய மொழிகளிலும், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் மற்றும் ஔவையாரின் "ஆத்திச்சூடி" ஆகியவை சீன மற்றும் அரபு மொழிகளிலும் மொழிபெயர்த்து தமிழர்களின் பெருமைகளை உலகறியச் செய்தார்கள். தமிழ் அறிஞர்களை சிறப்பிக்கும் வகையில் "முதலமைச்சர் கணினித் தமிழ் விருது", "தமிழ்த் தாய் விருது", "தமிழ்ச் செம்மல் விருது", "அம்மா இலக்கிய விருது" போன்ற 55 விருதுகளை அறிவித்தார்கள்.

தமிழுக்கு மேலும் மகுடம் சூட்டும் வகையில், தமிழ் மொழியின் தொன்மை, இலக்கியம், இலக்கணம் மற்றும் பண்பாடு தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு, தமிழ் மொழியின் சிறப்பினை ஆவணப்படுத்தி உலகெங்கும் கொண்டு செல்ல அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு 10 கோடி ரூபாய் வழங்கி உள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

2018 ஜனவரி 11] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

வரும் ஜனவரி 14 ஆம் நாள், வரலாற்றுச் சிறப்புமிக்க நமது மாநிலம் 'தமிழ்நாடு' என்ற பெயரோடு 50–வது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு பொன்விழா ஆண்டாக மாண்புமிகு அம்மாவின் அரசு கொண்டாட முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம் கண் போன்ற தமிழ் மொழி மற்றும் தமிழர்களின் பெருமையைப் பறைசாற்றும் வகையில், கலை, விளையாட்டு, கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டி போன்ற நிகழ்ச்சிகள் சென்னையிலும், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக நடத்தப்படும். தமிழ் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் இளம் தமிழ் ஆய்வாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, சென்னையில் நடைபெறும் நிறைவு விழாவில் இவர்கள் அனைவரும் சிறப்பிக்கப்படுவார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, "தமிழுண்டு, தமிழ் மக்களுண்டு– இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு" என்ற பாவேந்தரின் வரிகளுக்கேற்ப தமிழ் மொழியையும், தமிழ்நாட்டையும் கண்ணின் மணி போல தொடர்ந்து காத்து வரும் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–25

4. 'தமிழ்நாடு' பொன்விழா ஆண்டு கொண்டாடுதல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறிவிலே தெளிவு, நெஞ்சத்திலே உறுதி, அகத்திலே அன்பினோர் வெள்ளம், பொறிகளின்மீது தனி அரசாணை, பொழுதெல்லாம் இறைப் பேரருள், நெறியிலே நாட்டம்" என்ற பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் வாழ்ந்து, உலகத் தமிழினத்தின் ஒரே அடையாளமாக உயர்ந்து ஓங்கி நிற்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதல் வணக்கம்.